சிவப்பெருமானை முழு முதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு பாடல்களைப் பாடிய சமயப் பெரியோர்கள் நாயன்மார் எனவும், திருமாலை முழு முதற் கடவுளாக ஏற்றுக் கொண்டு பாடல்களைப் பாடிய சமயப் பெரியோர்கள் ஆழ்வார் என்றும் வழுங்கப்பட்டனர் (மணவாளன்,அ,அ.2004). அதாவது, கி.பி. ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழ் நாட்டில் சைவ சமயப் பெரியவர்களான நாயன்மார்களும்; வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றிப் பக்திப் பாடல்கள் பாடி ஊர் ஊராகச் சென்று தம்தம் சமயங்களைப் பரப்பி வந்தார்கள் (வரதராசன்,மு.2009).

நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த சைன சமயங்களை எதிர்த்து மக்களைத் திரட்டுவதற்குக் கலைநயத்துடன் கூடிய பக்திப் பாடல்கள் பயன்பட்டன (வரதராசன்,மு.2009). நாயன்மார் நால்வரும் ஆழ்வார்களில் பலரும் இசையோடு பாடல்களைப் பாடிக் கோயில்தோறும் இறைவனை வழிபட்டார்கள் (வரதராசன்,மு.2009). இறைவன் “ஏழிசையாய் இசைப் பயனாய் உள்ளவன்” என்றார் சுந்தரர், “நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்” என்று சம்பந்தர் போற்றப்பட்டார், தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்” என்று திருநாவுக்கரசர் சொல்லியுள்ளார் (வரதராசன்,மு.2009).

சைனரும் பௌத்தரும் புலன் அடக்கத்தையும், உண்ணாநோன்பு, இன்பவெறுப்பு முதலியவற்றையும் மக்களிடையே வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். அதுமட்டுமல்லாமல், துறவறத்தையே பெருமைப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால், ஆழ்வார்களும்; நாயன்மார்களும் பக்தியையே போற்றி, அதற்கு இசைவான ஆடல்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பாடல் முதலான கலைகளைப் பாராட்டினார்கள் (வரதராசன்,மு.2009). மேலும், ஆழ்வார்களும்; நாயன்மார்களும் இல்வாழ்க்கையில் இன்பமாக வாழ்ந்தாலும் எந்தத் தொழிலைச் செய்தாலும் உள்ளத்தை இறைவனுக்கு உரியதாகக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை நடத்தினால் போதும் என்று வலியுறுத்தினார்கள்.

ஆழ்வார்களுக்கும்; நாயன்மார்களுக்கும் பலவகைக் கலைகளையும் வளர்க்கும் இடமாகக் கோயில்கள் ஓங்குவதற்கு அவர்களுடைய பக்தி இயக்கம் துணை செய்தது. மக்களிடையே அவர்களின் இயக்கம் பரவுவதற்குத் தமிழ்ப் பாடல்கள் இசையோடு அமைந்து உதவி புரிந்தன. சைவ சமயத்தில் நாயன்மார்கள், குரவர்கள் என்றும் அழைக்கப்படுவர். நாயன்மார்கள் மொத்தம் அறுபத்து மூவர் உள்ளனர். அதில் மிக முக்கியமானவர்களாக நால்வர் எனப்படுகின்றனர். அவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

திருநாவுக்கரசர் பாடல்கள் காலத்தால் முந்தியவை. மேலும், அவை சமய இலக்கியம் சார்ந்தவை. சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் காலத்தால் பிந்தியவை. சைவ சித்தாந்தச் சாத்திர நூல்கள் மொத்தம் பதினான்கு உள்ளன. சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றான சிவஞானபோத நூலிலுள்ள கோட்பாடுகள் திருநாவுக்கரசர் பாடல்களில் புலப்படுகின்றதா என்பதை அடையாளம் காண்பதே ஆய்வின் சிக்கலாகக் கருதப்படுகின்றது.

அதாவது, திருநாவுக்கரசர் பாடி அருளிய தேவாரப் பாடல்கள் காலத்தால் முந்தியவை. ஆனால், சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களில் ஒன்றான

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சிவஞானபோதத்தில் இடம்பெற்றுள்ள சிவனின் எண்குணங்கள் மற்றும் ஐந்தொழில்கள் காலத்தால் பிந்தியவை. ஆகையால், காலத்தால் பிந்திய கோட்பாடுகள், காலத்தால் முந்திய தேவாரப் பாடல்களில் இடம்பெற்றுள்ளதா என்பதனை ஆராய்வதே இந்த ஆய்வின் சிக்கலாக அமைந்துள்ளன.

அதைத் தவிர்த்து, இன்றைய காலக்கட்டத்தில் சைவ சமய தொடர்பான புரிதலும்; அறிவும் இந்தியர்களிடையே மிகவும் குறைந்தே காணப்படுகின்றது. தலைமுறை தலைமுறையாக எடுத்துச் செல்ல வேண்டிய சமயம் தொடர்பான பல தகவல்கள், மக்களிடையே சென்று சேர்வது மிகவும் குறைந்தே காணப்படுகின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மக்கள் சமய சாராத மற்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவிற்குச், சமயத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு அக்கறை காட்டுவதில்லை. மேலும், சமயம் தொடர்பான விடயங்களைத் தெரிந்து கொள்வதற்கு முன்வருவதும் இல்லை. இந்நவீன காலத்தில், மற்ற விடயங்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை, மனிதனை நெறிபடுத்தக்கூடிய சமயத்திற்கு எவரும் கொடுப்பதில்லை என்பதே முற்றிலும் உண்மை.

மக்கள் சமயத்தின் முக்கியத்துவத்தையும், சமயத்தில் இருக்கும் சிறப்புகளையும் உணராததே இந்தச் சூழ்நிலைக்கு வித்திடுகின்றது எனலாம். இன்றைய சூழலில் அனைவரும் பணத்தை நோக்கி ஓடுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்துகின்றனர். ஒரு நாளில் 24 மணி நேரம் உள்ளது. ஆனால், மனிதன் அதில் சிறிதளவுகூட சமயத்தைப் பற்றியோ அல்லது இறைவனைப் பற்றியோ தெரிந்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்வதில்லை.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதுமட்டுமல்லாமல், சிலர் ஒரு நாளில் ஒரு முறை கூட இறைவனை வழிபட நேரம் ஒதுக்குவதில்லை. ஒருவர் சமயத்தின் முக்கியத்துவத்தை அறியாத காரணத்தினால் அவரின் அந்தத் தலைமுறையே சமயம் தொடர்பான இறை உணர்வு இல்லாத தலைமுறையாக ஆகக் கூடிய வாய்ப்புள்ளது. எனவே, வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குப் பணம் எவ்வளவு முக்கியமோ அதைவிட நம் வாழ்க்கையை நிம்மதியுடன் வாழ நமக்கு சமய அறிவும் மிக முக்கியமாகிறது.

அதுமட்டுமின்றி, பெரும்பாலான மக்கள் தேவாரப் பாடல்களின் பல அற்புதமான கருத்துகளை அறியாமல் தேவாரத்தைப் பாடுகின்றனர். தேவாரப் பாடல்கள் மக்களுக்குக் கூறவரும் கருத்துகளை அறியாமல் பாடுவதால் அதில் எந்தவொரு பயனும் இல்லை. இன்னும் சிலர் தேவாரப் பாடல்களை அரை குறையாகத் தெரிந்து கொண்டு பாடுகின்றனர். எனவே, இதையும் ஒரு சிக்கலாகக் கருதி தேவாரப் பாடல்களிலுள்ள சிறப்புகளை மக்களுக்கு உணர்த்தவும் இந்த ஆய்வு துணைபுரிகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேலும், இந்த ஆய்வை மேற்கொள்வதன் வழி, மேற்குறிப்பிடப்பட்ட மக்களுக்குச் சைவ சமயம், திருநாவுக்கரசர், தேவாரம், சிவனின் எண்குணங்கள், சிவனின் ஐந்தொழில்கள் தொடர்பான சிறப்புகளும்; வாழ்க்கைக்குத் தேவையான சமய அறிவும் கிடைக்கப்பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அந்தக் காரணத்தினாலும், ஆய்வாளர் இதைச் சிக்கலாகக் கருதி இவ்வாய்வை மேற்கொண்டுள்ளார்.

மேலும், இந்த ஆய்வு ஆய்வாளருக்கு இன்றைய நவீன காலத்தில் மக்களின் சைவ சமயம் தொடர்பான புரிதலையும் அறிந்து கொள்ள துணைப் புரிகின்றது. சைவ

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



சமயத்தின் அடிப்படை விடயங்களான சிவன், திருநாவுக்கரசர், தேவாரம் தொடர்பான சமய அறிவு மக்களிடையே உள்ளதா என்பதனையும் அடையாளம் காண இவ்வாய்வு வழி வகுக்கின்றது. எனவே, இந்த ஆய்வு வருங்கால தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டு கையாளப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூன்று நோக்கங்கள் பின்வருமாறு :

(i) திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் எண்குணங்களைச் சிவஞானபோத கோட்பாட்டின் வழி பகுத்தாராய்ந்து விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

(ii) திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் ஐந்தொழில்களைச் சிவஞானபோத கோட்பாட்டின் வழி பகுத்தாராய்ந்து விளக்குதல்.

(iii) உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள இந்துக்களிடையே, திருநாவுக்கரசர், சிவனின் சொரூப நிலை, தடத்த நிலை தொடர்பான புரிதலைக் கண்டறிந்து அதை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வில் மூன்று நோக்கங்களுக்கு ஏற்ப மூன்று வினாக்கள் அமைந்துள்ளன. அவை பின்வருமாறு :

(i) திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் எண்குணங்கள் யாவை?

(ii) திருநாவுக்கரசர் பாடல்களில் சிவனின் ஐந்தொழில்கள் யாவை?

(iii) உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள இந்துக்களிடையே, திருநாவுக்கரசர், சிவனின் சொரூப நிலை, தடத்த நிலை தொடர்பான புரிதல் யாவை? அதை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு முக்கியத்துவம்

இந்த ஆய்வுச் சமயத்தின் மேல் ஒரு விழிப்புணர்வு ஏற்பட வழிவகுக்கின்றது. இந்த ஆய்வின் வழி, எதிர்காலச் சந்ததியினர் வாழையடி வாழையாகச் சமயத்தைப் பின்பற்ற முடியும். இந்த ஆய்வைப் படிப்பவர்கள் முறையான சமய பின்பற்றலையும் அறிந்து கொள்ள முடியும். மேலும், இந்த ஆய்வானது தேவாரத்தின் மீது ஈடுபாடும்; நம்பிக்கையும் தோன்றுவதற்கு வழிவகுக்கின்றது. இந்த ஆய்வு, திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றையும்; திருநாவுக்கரசர் சிவன் மீது கொண்ட எல்லையில்லாத பக்தியையும்; திருநாவுக்கரசர் சிவனுக்காக மேற்கொண்ட தொண்டு நெறியையும் அறிந்து கொள்ள துணைபுரிகின்றது.

அதைத் தவிர்த்து, இந்த ஆய்வுச் சிவனுக்காகத் திருநாவுக்கரசர் அருளிய சில பாடல்களையும், அதன் சிறப்புகளையும் அறிந்து கொள்ளும் வழியாக அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



மேலும், இவ்வாய்வுத் திருநாவுக்கரசர் சிவனுக்காக அருளிய திருமுறையில் சிவனின் அற்புதங்களும்; சிறப்புகளும் புலப்படுவதை எடுத்துரைக்கின்றன. இதன் வழி, இந்த ஆய்வுச் சிவனின் எண்குணங்களையும்; சிவன் உயிரின்பால் மேற்கொள்ளும் ஐந்தொழில்களையும் அறியும் ஒரு பயன்மிக்க வாய்ப்பாக அமைகின்றன. அதுமட்டுமின்றி, இந்த ஆய்வு மலேசிய இந்துக்களிடையே சிவனின் சொரூப நிலை மற்றும் தடத்த நிலை தொடர்பான புரிதலைக் கண்டறியவும் மற்றும் அதை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் எடுத்துரைக்கின்றது.

## 1.7 ஆய்வு எல்லை

சைவ சமயத்தில் முழு முதல் கடவுளாகக் கருதப்படுபவன் சிவன். சைவ சமய அடியார்களாகத் திகழ்பவர்கள் நாயன்மார்கள் அல்லது குரவர்கள் ஆவர். சைவ சமயத்தில் மொத்தம் அறுபத்து மூன்று நாயன்மார்கள் உள்ளனர். அதில் நான்கு நாயன்மார்கள் மிக முக்கியப் பங்காற்றுகின்றனர். அவர்களை நால்வர் என்று அழைப்பர். அவர்கள் திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆவர். இவர்கள் திருமுறைக் கவிஞர்கள் என்றும் அழைக்கப்படுகின்றனர் (அருணாசலம்,ப.2007). பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் தோத்திர நூல் ஆகும். அந்தப் பன்னிரண்டு திருமுறைகளில் மூன்று திருமுறைகளைப் பாடியவர் திருநாவுக்கரசர் ஆவர்.

அவை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகும். திருநாவுக்கரசரின் மூன்று திருமுறைகளிலும் மொத்தம் 3,064 பாடல்கள் இடம்பெற்றுள்ளன (விசுவநாதன்,த.1999). திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையில் 1,069 பாடல்களும்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஐந்தாம் திருமுறையில் 1,015 பாடல்களும் மற்றும் ஆறாம் திருமுறையில் 980 பாடல்களும் அமைந்துள்ளன (விசுவநாதன்,த.1999). இந்த ஆய்வில் பக்க விரிவஞ்சி திருநாவுக்கரசரின் நான்காம் திருமுறையிலுள்ள முதல் 10 பதிகங்கள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது, இந்த ஆய்வில் நான்காம் திருமுறையில் உள்ள திருநாவுக்கரசரின் 100 பாடல்கள் ஆய்வு எல்லையாக அமைகின்றன. மேலும், ஆய்வுக் காலத்தைக் கருத்தில் கொண்டும் 100 பாடல்கள் மட்டுமே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

அதுமட்டுமின்றி, இந்த ஆய்வானது உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள இந்துக்களிடையே சிவனின் சொரூப நிலை மற்றும் தடத்த நிலை தொடர்பான புரிதலைக் கண்டறியவும் மற்றும் அதை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் எடுத்துரைக்கின்றது. உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள இந்துக்களிடையே சிவனின் சொரூப நிலை மற்றும் தடத்த நிலை தொடர்பான புரிதலைக் கண்டறிவதற்காக உலு சிலாங்கூர் மாவட்டத்தைச் சேர்ந்த 30 இந்துக்களிடையே வினா நிரல் பாரம் கொடுக்கப்பட்டு, சிவனின் சொரூப நிலை மற்றும் தடத்த நிலை தொடர்பான அவர்களின் புரிதல் கண்டறியப்பட்டது. அதன் பின், வினா நிரல் பாரத்திலுள்ள விடைகள் விளக்கமுறையில் விளக்கப்பட்டன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.8 ஆய்வு ஆதாரங்கள்

இந்த ஆய்வில் இரண்டு வகையான ஆதாரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை முதன்மை ஆதாரம், துணைமை ஆதாரம் ஆகியவைகளாகும். இந்த இரண்டு வகை ஆதாரங்களும் ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்குத் துணையாக அமைந்தன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.1 முதன்மை ஆதாரம்

இந்த ஆய்வில் சொல்லரசு புலவர் வீ.சிவஞானத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம் பகுதியில் திருநாவுக்கரசர் பாடிய நான்காம் திருமுறையின் முதல் பத்துப் பதிகங்கள் மட்டும் முதன்மை ஆதாரங்களாகும். இந்த முதல் பத்துப் பதிகங்கள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 1.8.2 துணைமை ஆதாரம்

சிவன், திருநாவுக்கரசர், திருமுறை ஆகிய தலைப்புகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வேடுகள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள் ஆகியவைத் துணைமை ஆதாரங்களாகும். இந்தத் துணைமை ஆதாரங்கள் முந்தைய ஆய்வு எனும் இயலுக்கு மிகவும் பயனாக அமைந்தன. மேலும், உலுசிலாங்கூர் மாவட்டத்திலுள்ள 30 இந்துக்கள் வினா நிரல் பாரத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதைத் தவிர்த்து, சைவ சமய தொடர்பான தகவல்களை நெறிப்படுத்துவதற்கு, ஆய்வாளர் சமய நெறியாளர்களின் ஆலோசனைகளையும்; கருத்துகளையும் பெற்றுக் கொண்டார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.9 முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம்

### 1.9.1 சைவச் சித்தாந்தம்

தமிழர் சைவச் சமயத்தின் கோட்பாடுகளைச் சைவச் சித்தாந்தம் என்கின்றனர். 'சைவம்' என்பதற்குச் சிவனோடு தொடர்பு உள்ளது என்று பொருள். சிவபெருமானே முழு முதற் கடவுள் என்றும், வேதமும் ஆகமும் அவன் அருளிச் செய்த முதல் நூல்கள் என்றும், அவற்றுள் வேதம் பொது; ஆகமம் சிறப்பு என்றும், விபூதி, உருத்திராக்கம் ஆகியவையே சிவச்சின்னங்கள் என்றும், திருவைந்தெழுத்தே மூலமந்திரம் என்றும், சிவலிங்க வழிபாடே மேலான வழிபாடு என்றும், அவ்வழிபாட்டைச் சிவாகமத்தில் கூறியுள்ளபடி குரு மூலமாக உபதேசம் பெற்றுச் செய்வதே சிறப்பு என்றும் நினைந்து அவ்வண்ணமே ஒழுகும் நெறி சைவச் சமயம் எனப்படும் (ஞானப்பூங்கோதை,மோ.2015). சைவ சமயத்தின் கொள்கைகளைப் புலப்படுத்துவது 'சைவச் சித்தாந்தம்' என்ற கோட்பாடாகும்.

சைவச் சித்தாந்தத்தில் 'சித்தாந்தம்' எனும் சொல் முடிந்த முடிவு என்ற பொருளைக் குறிக்கின்றது. அதாவது, பற்பல கோணங்களில் ஆய்வுச் செய்யப்பட்டுத் தருக்க முறையில் நிறுவப்பட்ட முடிவுகளுக்கெல்லாம் முடிவாக உள்ளது என்பதே இதற்குப் பொருளாகும் (ஞானப்பூங்கோதை,மோ.2015). உலகியல் நெறிகளோடு ஒத்த கருத்துடையதாய் அறிவியலுக்கு ஏற்புடையதாய் அனைத்துச் சமய நெறிகளையும் தழுவியதாய் விளங்குவது சைவ சித்தாந்தத்தின் தனிச் சிறப்பாகும் (ஞானப்பூங்கோதை,மோ.2015). 13-ஆம் நூற்றாண்டில் தோன்றி அருளிய மெய்கண்டரால் சைவச் சித்தாந்தம் முழுமையான, வரையறுக்கப்பட்ட தத்துவக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொள்கையாக நூல் வடிவம் பெற்றது (சிதம்பரம்,சி,நா.2014). அவரும் அவர் வழியில் நின்ற அருளாளர்கள் அருளிய 'மெய்கண்ட சாத்திரங்கள்' என வழங்கப்படுகின்ற 14 நூல்கள் சைவ சித்தாந்தத் தத்துவக் கொள்கைகளைச் சிறப்பாக விளக்குகின்றன (சிதம்பரம்,சி,நா.2014).

### 1.9.2 சிவஞானபோதம்

சைவச் சித்தாந்தத்தில் மொத்தம் 14 சாத்திர நூல்கள் உள்ளன. அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை வெண்பா, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகியவைகளாகும். சிவஞானபோதம் உட்படத் தமிழில் உள்ள மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்காகும் (தட்சிணாமூர்த்தி,அ.2008). சிவஞானபோதம் எனும் நூலை அருளிச் செய்தவர் திருப்பெண்ணாகடத்தில் தோன்றித் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருந்த மெய்கண்ட தேவநாயனார் என்பவர் (சுப்புரெட்டியார்,ந.2001). தோத்திர நூல்களாகிய பன்னிரு திருமுறைகளையும் சாத்திர நூலாகிய சிவஞானபோதத்தையும் இணைத்துத் தோத்திர வழியில் சாத்திரம் என்ற மரபை உண்டாக்கி, "தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே" என்ற அப்பரடிகளின் அருள் வாக்கினுக்கு அழகியதோர் அனுபவ மரபாக நின்றவர் மெய்கண்டார் (இரத்தினசபாபதி,வை.2005).

சிவஞானபோதம் எனும் சாத்திர நூல் பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டுள்ளது. பன்னிரண்டு சூத்திரங்களில் முதல் ஆறு சூத்திரங்கள் 'பொது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அதிகாரம் என்றும், மற்ற ஆறு சூத்திரங்கள் 'உண்மை அதிகாரம்' என்றும் அழைக்கப்படுகின்றன. மேலும், சிவஞானபோதம் நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. அவை பிரமாண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் ஆகியவைகளாகும். மேற்கண்ட ஒவ்வொரு இயலும் மூன்று சூத்திரங்களை உடையது. சைவ சித்தாந்தத்திலுள்ள முப்பொருள் உண்மையான இறை, உயிர், தளை ஆகியவை பிரமாண இயல் எனப்படுகின்றது. இறை, உயிர், தளை ஆகியவற்றின் இயல்பைப் புலப்படுத்துவது இலக்கண இயல். மூன்றாவது இயலான சாதன இயலில் உள்ள மூன்று சூத்திரங்கள் உயிர்கள் இறைவனை அடைய உரிய நெறிமுறைகளைக் கூறுகின்றன. இறுதியாகப், பயன் இயல் உயிர்கள் பெறும் பயன்களைக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.3 திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் திருவாமூர் எனும் ஊரில் பிறந்தார். திருநாவுக்கரசரை அப்பர் என்றும் அழைப்பர். திருவாரூரில் புகழனார்-மாதினியார் தம்பதி இனிதாக இல்லறம் மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு முதலில் திலகவதியார் என்ற மகளும், பிறகு மருணீக்கியார் என்ற மகனும் பிறந்தனர் (கலைப்பித்தன்.2006). திருநாவுக்கரசர் இறை வழிபாட்டின் மீது மிகவும் நாட்டம் கொண்டவராகத் திகழ்ந்தார். திருநாவுக்கரசரின் அக்காளுக்குப் பன்னிரண்டு வயதில் திருமணம் செய்ய முடிவு செய்தனர். அதற்கு ஏற்றவாறு புகழனாருக்கு இணையாக விளங்கும் போர் வீரர் கலிப்பகையார் என்பவருக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்கு நிச்சயிக்கப்பட்டது. திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்ட சில தினங்களில் வடபுலத்தில் போர் மூண்ட

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


காரணத்தினால் கலிப்பகையார் சேனாதிபதியாகப் புறப்பட்டார். இதற்கிடையில் புகழனாருக்குத் திடீரென்று நோய் வந்து இறந்து போனதோடு, அவர் பிரிவு துயர் தாங்காது மனைவி மாதினியாரும் இறந்து போனார் (கலைப்பித்தன்.2006). வடபுலப் போரில் கலிப்பகையார் பகைவர்களை எதிர்த்துப் போரிட்டு உயிர் நீத்தார்.

இந்தச் செய்தியை அறிந்த திலகவதியார், தான் கலிப்பகையாருக்கு நிச்சயிக்கப்பட்டதால், அவருடைய மனைவியாகிவிட்டதாகவும்; அவரில்லாமல் தானும் உயிர் வாழக்கூடாது என்று சாகத் துணிந்தாள். உடனே திருநாவுக்கரசர் தன் அக்காளைக் காப்பற்றினார். அதன் பின், திலகவதியார் சிவன் மீது பக்தி கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தார். ஆனால், திருநாவுக்கரசர் சமண சமயத்தில் சேர்ந்து தருமசேனர் என்ற பெயர் தாங்கி சமண மதத்திற்குத் தொண்டு ஆற்றினார் (கலைப்பித்தன்.2006). ஆனால், திலகவதியார் அதைக் கண்டு மனம் வருந்தினார். உடனே சிவன் அவரின் கனவில் தோன்றி, திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் அருளி, திருந்த செய்வதாகக் கூறிச் சென்றார். இறைவன் கூறியவாறே திருநாவுக்கரசர் கடுமையான சூலை நோயால் துன்பப்பட்டார். சமணரால் தன் சூலை நோயைத் தீர்க்க முடியாத காரணத்தினால், தன் அக்காவைச் சென்று சந்தித்தார். திலகவதியார் தம் தம்பியிடம் இனிமேல் சிவன் தொண்டு செய்து வாழ வேண்டும் என்று கூறி திருநீற்றைத் தந்தார். அதன் பின், திருநாவுக்கரசரின் சூலை நோய் குணமாகியது.

### 1.9.4 திருமுறை

திருமுறைகள் சைவ சமயத்தின் தோத்திரங்களாகத் தமிழில் திகழ்கின்றன. திருமுறைகள் இம்மை மறுமைச் செல்வங்களை முறையாகத் துய்க்கத் தூண்டுவன; திருநெறி காட்டும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



நூல்கள்; திருநின்ற செம்மையுடையோரின் – கேடும் ஆக்கமும்கெட்ட திருவுடையோரின் அருள்நெறிகளை விளக்குவனவாக அமைந்துள்ளது (ஞானப்பூங்கோதை,மோ.2015). திருமுறை எனும் சொல்லில் 'திரு' எனப்படுவது செல்வம் என்று பொருள்படும். அதாவது, பின்னும் அது சென்றடையாத திருவாம் முத்திச் செல்வத்தையும் குறிக்கும்; சிவத்தையும், சிவனருளையும் அவ்வருளால் எய்தும் பேரின்பத்தையும் குறிக்கும் (ஞானப்பூங்கோதை,மோ.2015). அடுத்து, முறை எனும் சொல்லுக்கு நூல் என்பது பொருள். எனவே, திருமுறை எனப்படுவது அழியாப் பேரின்பத்தை அடைவதற்கு வழிகாட்டியாகத் திகழ்பவை ஆகும்.

மாமன்னன் இராசராசன் அவ்வப்போது சிலராலும் பலராலும் பாடப்பட்டு வந்த திருமுறைகளைச் செவிமடுத்து மகிழ்ந்து அவைகளை முழுமையாகப் பெற வழியுண்டா என்று கவன்று கொண்டிருந்தபோது திருநாரையூர்ப் 'பொல்லாப் பிள்ளையாரின்' அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகளின் புகழ் செவியில் பட்டது (ஞானப்பூங்கோதை,மோ.2015). இராசராசன் உடனே நம்பியாண்டாரை அணுகி தன் குறையைத் தீர்க்கும் படியாகக் கோரிக்கை விடுத்தான். அதன் பின், நம்பியாண்டார் தம் வழிபாடு தெய்வமான பிள்ளையார் அருள் செய்ததற்கு ஏற்றவாறு தில்லையிலே அடைக்கப்பட்டிருந்த தேவாரப் புதையலைப் பெறுவதற்கு வழி காட்டினார். இராசராசன் நம்பியைக் கொண்டு, தில்லையில் அடைத்து வைத்திருந்த முதல் ஏழு திருமுறைகளைப் பெற்றான். பிறகு, அந்த ஏழு திருமுறைகளையும் தொகுபித்த மன்னன் சிவபாதசேகரன் எனும் பெயரைப் பெற்றான். அதனைத் தொடர்ந்து, இந்த மன்னன் காலம் தொடங்கி திருமுறைகள் நாடெங்கும் பரவத் தொடங்கின.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.5 சொரூப நிலை

சொரூப நிலை என்பது சிவனின் சிறப்பிலக்கணம் அல்லது உண்மை நிலை என்று பொருள்படும். சொரூப நிலை எனப்படுவது முதல்வனது சிறப்பிலக்கணமாகக் கருதப்படுகின்றது. இறைவன் ஒருவனே மேலான பொருளாகக் கருதப்படுகின்றான். அவனுக்குக் குணமும்; குறியும் இல்லை. அவன் மலமில்லாத்தூயன் (நிர்மலன்); அவன் ஒருவனானவான்; அழிவில்லாதவன் (நித்தியம்) உயிர்களின் அறிவுக்குள் அறிவாகவுள்ளான்; எல்லையற்றவன்; ஆனந்தமயமானவன்; மாறுபட்டவர்க்கு அரியன்; வழிப்பட்டார்க்கு எளியன்; சிறியவற்றுள் சிறியவன்; பெரியவற்றுள் பெரியவன்; அறிவுடையோர் அவனைச் சிவன் என்பர் (தட்சிணாமூர்த்தி,அ.2008).

உமாபதி சிவாச்சாரியார் பாடி அருளிய சிவப் பிரகாசமும் அதனையே கூறுகின்றது. சிவன் குணம்; குறி ஆகியவற்றைக் கடந்த நிலையினைச் சொரூபம் என்று கூறுவர். சிவனின் சொரூப நிலையின் கீழ் சிவனின் எண்குணங்கள் உள்ளடங்கியுள்ளன. தன் வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்கள் இன்மை, முடிவில்லா ஆற்றல் உடைமை, பேரருள் உடைமை, வரம்பில்லா இன்பம் உடைமை ஆகியவை சிவனின் எண்குணங்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.6 தடத்த நிலை

சிவனின் தடத்த நிலை என்பது பொது நிலையைக் குறிக்கும். அதாவது, சிவன் குணம்; குறி ஆகியவற்றோடு உள்ள நிலை தடத்த நிலை எனப்படும். மந்திரம் பதம் வன்னம் என்னும் சொற்பிரபஞ்சமும், தத்துவம் புவனம் கலை என்னும் பொருட் பிரபஞ்சமும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகிய இப்பிரபஞ்சமிரண்டையும் ஒடுக்கும் திருமேனி அருவமென்றும், தோற்றுந் திருமேனி அருவுருவம், உருவம் என்றுஞ் சொல்லப்படும் (குமாரசுவாமிக்குருக்கள்,ச.2005).

அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்றும் பரமசிவனது தடத்த வடிவங்களாகும். சிவபெருமான் இம்முத்திறத்திருமேனிகளைக் கொண்டருளியது, ஐந்தொழில் செய்து ஆன்மாக்களது பாசத்தை நீக்கி முத்தி கொடுத்தற்பொருட்டுக் கொண்ட கருணையேயாம் (குமாரசுவாமிக்குருக்கள்,ச.2005). அதாவது, உயிர்கள் மீது கொண்ட கருணை காரணமாக இறைவன் ஐந்தொழில் செய்கிறான் (சிதம்பரம்,சி,நா.2014). படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகியவை அனைத்தும் சிவனின் ஐந்தொழில்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

அறிமுகம் என்ற முதல் இயலில் முன்னுரை, ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வில் இடம்பெறும் முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் ஆகியவைகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. முன்னுரையில் சமயம் மற்றும் சைவச் சமயம் தொடர்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆய்வுப் பின்னணியில் ஆய்வு தொடர்பான கருத்துகள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆய்வுச் சிக்கலில் ஆய்வு செய்யப்பட்டதற்கான காரணங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆய்வு நோக்கம், ஆய்வுச் செய்யப்பட்டதற்கான நோக்கங்களைப் புலப்படுத்தியுள்ளது. இந்த ஆய்வில் மூன்று நோக்கங்கள் அமைந்துள்ளன. ஆய்வு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வினாவில், ஆய்வு நோக்கத்திற்கு ஏற்ப ஆய்வு வினாக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆய்வின் முக்கியத்துவம் தெளிவாகவும்; விரிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. ஆய்வு எல்லை எனும் பகுதியில் ஆய்வின் வரையறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆய்வு ஆதாரங்களில் ஆய்வுகளுக்காகச் சேகரிக்கப்பட்ட தரவுகளின் ஆதாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதியாக, ஆய்வில் இடம்பெறும் முக்கியக் கலைச்சொற்களின் விளக்கம் என்ற பகுதியில் தலைப்பிலுள்ள சொற்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi